## அத்திக்கடவு - அவிநாசி திட்டப் பணிகள்

# விரைவில் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர நடவடிக்கை!

## அமைச்சர் சு.முத்துசாமி பேட்டி!

ஈரோடு, ஆக. 6 -

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட ரங்கில், அத்திக்கடவு அவிநாசி திட்ட முன்னேற்ற நிலை தொடர்பான ஆய்வுக்கூட்டம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் நடைபெற்றது.

அமைச்சர் சு.முத்துசாமி செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற நாள் முதல் அத்திக்கடவு அவிநாசி திட்டத்தில் சிறப்பு கவனம் செலுத்தி திட்டப்பணிகளின் நிலை குறித்து தொடர்ந்து, கேட்டறிந்து வருவதுடன், விரைவாக இத்திட்டத்தினை முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தி வருகிறார்கள்.

இத்திட்டத்தில் மொத்தம் உள்ள 6 நீரேற்று நிலையங்களில் 1 முதல் 3 நீரேற்று நிலையங்கள் உள்ள பகுதிகளில் நிலம் கையகப்படுத்துவதில் சிறு தொய்வு ஏற்பட்டதன் காரணமாக பணிகள் சிறு காலதாமதமானது. நீரேற்று நிலையம் 1 முதல் 3 இடையில் உள்ள பட்டா நிலங்களின் வழியாக பிரதான குழாய் பதிக்கும் பணிகளை தொடங்கும் முன் நில இழப்பீடு மற்றும் பயிர் இழப்பீடு தொகை வழங்கிய பின் பணிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டதால் ஜூன் 2021 முதல் ஆகஸ்ட் 2022 வரை அப்பகுதியில் குழாய் பதிக்கும் பணிகளை தொடங்க இயலவில்லை.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நீர்வளத்துறை அலுவலர்கள் மூலம் பல்வேறு பேச்சுவார்த்தை கூட்டம் நடத்தப்பட்டும் நில உரிமையாளர்கள் முன் வரவில்லை. தொடர்ந்து நில உரிமையாளர்களிடம் அரசின் சார்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு செப்டம்பர் 2022 முதல் குழாய் பதிக்கும் பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டு ஜனவரி 2023ல் பணிகள் முடிக்கப்பட்டது. அதன் பின்னர் 20.02.2023 அன்று சோதனை ஓட்டப் பணிகள் தொடங்கப்பட்டது. இருப்பினும் பயன்பாடு இல்லாத காரணத்தால் பல்வேறு இணைப்பு குழாய்களில் பழுது ஏற்பட்டு நீர்க்கசிவு ஏற்பட்டு வந்தது.

தொடர்ந்து, பிற துறைகள் மூலம் கிளைக் குழாய்களில் ஏற்பட்ட பழுதுகளை சரிசெய்து ஜூன் 2023ல் 750 குளம் குட்டைகளுக்கு தண்ணீர் கொண்டு சேர்க்கப்பட்டது, அதன் பின்னர் போதிய உபரி நீர் காலிங்கராயன் அணைக்கட்டில் இல்லாத காரணத்தினால் மீண்டும் நவம்பர் 2023ல் தொடங்கப்பட்டு ஜனவரி 2024ல் 1045 குளங்களுக்கும் தண்ணீர் கொண்டு சேர்க்கப்பட்டுள்ளது.

மார்ச் 2024 முதல் உபரி நீர் காலிங்கராயன் அணைக்கட்டில் இல்லாத காரணத்தினால் இத்திட்டம் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர இயலவில்லை. மேலும், 30.07.2024 முதல் காலிங்கராயன் அணைக்கட்டில் உபரிநீர் வரத்தொடங்கி, காவேரி ஆற்றில் வெள்ள நீர் வரத்தொடங்கியதால், இத்திட்டத்தை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு முன்னேற்பாடாக சோதனை ஓட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருகின்ற ஆகஸ்ட் 15 அன்று உறுதியாக பவானிசாகரில் தண்ணீர் திறந்து விட வேண்டுமென அறிவுறுத்தியுள்ளார். அதன்படி, தண்ணீர் திறந்து விட்ட பிறகு கிடைக்கும் அதிகப்படியான உபரிநீர் பெற்றவுடன் 6 நீரேற்று நிலையங்களிலும் ஒரே நேரத்தில் இயக்கும் வாய்ப்புகள் அமைந்தவுடன் உடனடியாக இத்திட்டப்பணியினை விரைவாக பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் இத்திட்டத்தில் தனி கவனம் செலுத்தி தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள்.

மேலும் இத்திட்டத்தில் சிறு, சிறு பழுதுகள் ஏதேனும் இருப்பின் அந்த பழுதுகளையும் விரைந்து முடிக்க தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், ஈரோடு, திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் பட்டா நிலங்களின் வழியாக செல்லும் அத்திக்கடவு அவிநாசி திட்டக் குழாய்களை இயக்கம் மற்றும் பராமரிப்பு காலங்களில் சென்று ஆய்வு மற்றும் பழுது பார்ப்பதற்கு ஏதுவாக நில உரிமையாளர்களுக்கு நிரந்தர குத்தகை மூலம் பாதை உரிமைத் தொகை பெறுவதற்கு ஒப்புக்கொண்டவர்களுக்கு மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக அரசிற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, தற்பொழுது அரசாணை கிடைக்கப்பெறும் நிலையில் உள்ளது. அரசாணை பெற்றவுடன் மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக நில உரிமையாளர்களிடம் பாதை உரிமைக்கான ஒப்பந்தம் இடப்பட்டு இழப்பீட்டு தொகை வழங்கப்படும் என தெரிவித்தார்.

தொடர்ந்து, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர், அத்திக்கடவு அவிநாசி திட்டம் செயல்படுத்துவது தொடர்பாக சம்பந்தப்பட்ட விவசாயிகளுடன், இத்திட்டம் தொடர்பான கலந்தாலோசனை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா, மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், ஈரோடு வருவாய் கோட்டாட்சியர்கள் சதிஷ்குமார் (ஈரோடு), கண்ணப்பன் (கோபிசெட்டிபாளையம்), நீர்வள ஆதாரத்துறை கண்காணிப்பு பொறியாளர் திருமலைகுமார், செயற்பொறியாளர்கள் நரேந்திரன், சுப்பிரமணியன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் முகம்மது குதுரத்துல்லா (பொது), செல்வி. பிரேமலதா (நிலம்) உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ‘அ’ போட்டது வேண்டுமா?

# ‘அ’ போடாதது வேண்டுமா?

## முத்தமிழறிஞர் கலைஞர் கேள்வி!



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியது:

“நீதி” க்கு முன்பு ‘அ’ போட்டால் என்ன வரும்?

மக்கள் சொன்னார்கள் “அநீதி”

“நியாயத்திற்கு “முன்னால் ‘ அ’ போட்டால்?

மக்கள் சொன்னார்கள் ‘அநியாயம்”.

“சுத்தம்” முன்னாடி ‘ அ’ போட்டால்?

மக்கள்: “அசுத்தம்”.

மீண்டும் கலைஞர் கேட்டார் “யோக்கியன்” முன்னாடி ‘அ’ போட்டால்?

மக்கள்: “அயோக்கியன்”.

இப்போது சொல்லுங்கள் உங்களுக்கு ‘அ’ போட்டது வேண்டுமா? ‘அ’ போடாதது வேண்டுமா?

மக்கள் சொன்னார்கள்

‘அ’ போடாதது தான் வேண்டும்.

அப்போது கலைஞர் சொன்னார்.

சிந்தியுங்கள் மக்களே.. “அ.தி.மு.க.”விற்கு முன்னால் ‘அ’ போட்டிருக்கிறார்கள்.

தி.மு.க. வா?

அ.தி.மு.க. வா?

எனக் கேட்டார். மக்கள் உடனே தி.மு.க. வேண்டும் என கோஷம் எழுப்பினர்.

## வீட்டுக்கே பொருட்களைக் கொண்டு வந்து சேர்க்கும்

# சேவை (கிக்) தொழிலாளர்களுக்கு இழப்பீடு - பணி பாதுகாப்பை உறுதி செய்திடுக!

## மாநிலங்களவையில் கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக. 6 -

வீட்டுக்கே பொருட்களைக் கொண்டு வந்து சேர்க்கும் சேவை (கிக்) தொழிலாளர்களுக்கு இழப்பீடு - பணி பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாநிலங்களவையில் பேசிய திருச்சி சிவா வலியுறுத்தினார்.

மாநிலங்களவையில் திருச்சி சிவா பேசியதாவது:

வீட்டுக்கே பொருட்களைக் கொண்டு வந்து சேர்க்கும் சேவை தொழிலாளர்களின் (GIG Workers) பாதுகாப்பு பற்றிய முக்கியமான பிரச்சினையில் உங்கள் மூலமாக சிறப்புமிக்க இந்த அவையில் அரசின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

தனியார் நிறுவனங்களால் சுரண்டப்படும் இந்த தொழிலாளர்களை மீட்டெடுக்க வேண்டும்.நேர கட்டுப்பாடு இன்றி சில தளர்வுகளோடு கிக் பொருளாதாரம் (GIG Economy) வருமான வாய்ப்பு தருவதால் தற்போது 80 லட்சம் பேர் இதில் பணிபுரிகிறார்கள். இந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 2030ல் 2.3 கோடியாக உயரும் என்று நிதி ஆயோக் அறிக்கை குறிப்பிடுகிறது.

போதுமான பாதுகாப்பின்மையாலும் மரியாதை குறைவான நடத்தைகளினாலும் இந்த தொழிலா



ளர்கள் மிகவும் கடுமையாக பாதிக்கப்படுகிறார்கள்.

**80 லட்சம் பேர் பணியாற்றுகின்றனர்!**

கொரோனா .. பெருந் தொற்றுக் காலத்தில் ஓட்டுனர்களாக, வீடுகளுக்கு நேரடியாக சென்று பொருட்களை சேர்ப்பவர்களாக, முகவர்களாக பணியாற்றிய இந்த கிக் தொழிலாளர்களின் பங்கு , இவர்களின் முக்கியத்துவத்தையும் பொருளாதாரத்திற்கு தந்த பங்களிப்பையும் தெளிவாக உணர வைத்தது,!

யார் இந்த கிக் பணியாளர்கள் என்பது பலரின் கேள்வியாக உள்ளது. சொமாட்டோ ஸ்விக்கி, டன்சோ, ஓலா, ஊபர், ( Zomato, Swiggy, Dunzo, Ola, Uber) போன்றவற்றில் பணியாற்றுபவர்கள் தான் இந்த கிக் பணியாளர்கள். 80 லட்சம் பேர் இந்த வேலையை பார்க்கின்றனர்.

ஒட்டுமொத்த உலகமே முடங்கி கிடந்த போது மக்களின் அத்தியாவசிய தேவைகளை இவர்கள் பூர்த்தி செய்தார்கள். இது இவர்களின் மிக மிக முக்கியமான பாராட்டுக்குரிய சேவை.

ஆனால் இப்போது வெளியாகியிருக்கும் பல அறிக்கைகள் இந்த தொழிலாளர்கள் மிகவும் வேதனை தரத்தக்க நிலையில் உள்ளதாக கூறு கின்றன. இவர்களுக்கு நிர்ணயிக்கப்படும் இலக்குகளை சில தவிர்க்க முடியாத காரணங்களினால் எட்ட முடியாதபோது இவர்களுக்கான மருத்துவ காப்பீடு குறைக்கப்படு கிறது அல்லது நீக்கப்படுகிறது. இதன் விளைவாக அவசரகால மருத்துவ தேவையில் அவர்களது குடும்பங்கள் பெருமளவிற்கு கடுமையாக பாதிக்கப்பட நேர்கிறது.

**விபத்து காப்பீடு வழங்கிடுக!**

ஒட்டுமொத்த உலகமே முடங்கி கிடந்த போது மக்களின் தேவைகளை இவர்கள் பூர்த்தி செய்தார்கள். இது இவர்களின் மிக மிக முக்கியமான பாராட்டுக்குரிய சேவை. உணவு விநியோக தளத்தில் பணியாற்றும் கிக் தொழிலாளர்களுக்கு எந்தவித குழப்பமும் இல்லாத தெளிவான கொள்கையோடு விபத்து காப்பீடு வழங்க வேண்டும்.

தற்போது உலகளவில் பல நாடுகளில் இந்தத் துறையில் பணியாற்றுபவர்களுக்கு தரப்படும் உரிமைகளும் சலுகைகளும் நம் நாட்டில் இவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். வேலை பாதுகாப்பின்மை இவர்கள் ஒற்றுமைக்கு தடையாக உள்ளது. இது இவர்களுக்கு மிகப் பெரிய அளவில் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

அமைப்பு சார்ந்த சேவை தொழிலாளர்களுக்கு கிடைப்பது போல் நன்மைகளும் சலுகைகளும் இவர்களுக்கு கிட்டுவதில்லை .காரணம் கிக் தொழிலாளர்கள் சுதந்திரமான காண்ட்ராக்டர்களாக கருதப்படுவதுதான்.!

வேலை செய்யும் பணியாளர்கள் என்பதற்கு பதிலாக அவர்களை பங்குதாரர்கள் என்றும் முகவர்கள் என்றும் அழைக்கிறார்கள். உச்ச நீதிமன்றம் கிக் பணியாளர்களுக்கு சமூக பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் மகப்பேறு மற்றும் மருத்துவ காப்பீட்டு பலன்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் கருத்து தெரிவித்துள்ளது. பல்வேறு மாநில சட்டமன்றங்களில் இந்த கிக் தொழிலாளர்களின் நலனை கருத்தில் கொண்டு நியாயமான சட்ட முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

**தேசிய அளவில் ஒழுங்குபடுத்த கட்டமைப்பை உருவாக்கிடுக!**

நான் ஒன்றிய அரசை வலியுறுத்துவது என்னவென்றால் ஒழுங்கமைக்கப்பட்ட துறைத் தொழிலாளர்களைப் போலவே இந்த கிக் தொழிலாளர்களுக்கும் இழப்பீடு மற்றும் பணிப் பாதுகாப்பினை உறுதி செய்ய துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். கிக் பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்த தேசிய அளவில் ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டும். சேவைத் துறையில் உள்ள மற்ற தொழிலாளர்களைப் போலவே சரிசமமான தர நிலையை உருவாக்குமாறு வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு திருச்சி சிவா பேசினார்.

## முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆறாம் ஆண்டு நினைவு தினம்:

# தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவீர்!

## மாவட்டச் செயலாளர், அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!

தூத்துக்குடி, ஆக. 6 -

ஐம்பது ஆண்டுகள் தி.மு.கழகத்தின் தலைவர் பொறுப்பை திறம்பட நிறைவேற்றி தமிழ் சமூகத்திற்கு தொண்டாற்றிய தகைசால் பெருந்தகை. 1957 முதல் போட்டியிட்ட அனைத்து சட்டமன்றத் தேர்தலிலும் வெற்றி பெற்று 60 ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினராக, 5 முறை 19 ஆண்டுகள் தமிழ்நாட்டின் முதலமைச்சர் பொறுப்பை சிறப்புடன் நிறைவேற்றி பல முற்போக்கான, அறிவியல்பூர்வமான சட்டங்களை இயற்றி நவீன தமிழகத்தை வளர்த்தெடுத்த சிற்பி.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் கண்ணும் கருத்துமாக செயல்பட்டவர். தாய்மொழி தமிழுக்கு



செம்மொழிப் பெருமையை பெற்றுத்தந்தவர். வளரும் தலைமுறையின் எதிர்காலத்தை வளப்படுத்த தன் வாழ்நாள் முழுவதும் செயலாற்றிய தலைவர் கலைஞர் அவர்களின் 6 ஆவது நினைவுநாள் ஆகஸ்ட் 7ம் தேதி வருகிறது.

மறைந்து ஆறு ஆண்டுகள் ஆனாலும் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நிறைந்து வாழ்ந்து வரும் முற்போக்குச் சிந்தனையின் திருவுருவமாம் தலைவர் கலைஞர் அவர்களுக்கு நினைவஞ்சலி செலுத்தும் விதமாக விதமாக தி.மு.க தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னையில் அமைதிப் பேரணி நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் காலை 10 மணி அளவில் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு எனது தலைமையில் நினைவஞ்சலி செலுத்தப்படுகிறது.

தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் உள்ள கழக அமைப்புகளின் அனைத்து அலுவலகங்களிலும், ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, மாநகராட்சி பகுதிகளில் உள்ள வட்டங்களிலும், நகர, பேரூர் வார்டுகளிலும், ஒன்றியங்களில் உள்ள 199 ஊராட்சிகளில் முக்கிய சந்திப்புகளிலும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தை அலங்கரித்து மாலை அணிவித்து நினைவஞ்சலி செலுத்த வேண்டும்.

அந்தந்த பகுதிகளில் நடைபெறும் நினைவஞ்சலி நிகழ்ச்சியில் கழக மாவட்ட, மாநில நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள், மாவட்ட ஊராட்சி, ஒன்றியங்கள், நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகிய அமைப்புகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் சார்பு அணிகளின் மாவட்ட மற்றும் அனைத்து நிர்வாகிகள், கழக முன்னணியினர், பொதுமக்கள் பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செல்லியம்பட்டி ஊராட்சியில் 01.08.2024 அன்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில், ரூ.42.65 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய கிராம ஊராட்சி செயலக கட்டிடத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கென திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் ஆ.ரா.சிவராமன், செல்லியம்பட்டி ஊராட்சி மன்றத்தலைவர் சண்முகம் உட்பட பலர் உள்ளனர்.




மதுரை மாநகராட்சி அருள்தாஸ்புரம் பகுதியில் உள்ள திரு.வி.க. மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற விழாவில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், மாணவ, மாணவியர்களுக்கு தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகள், மற்றும் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச சீருடைகள் ஆகியவற்றை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் சங்கீதா, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், துணை மேயர் நாகராஜன், மாவட்ட கல்வி அலுவலர் மற்றும் அதிகாரிகள், பொதுமக்கள், மாணவ, மாணவிகள் உள்ளனர்.